## உழவர்கரை நகராட்சி
## தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம்
## புதுச்சேரி

***

உழவர்கரை நகராட்சி சார்பில் மேட்டுப்பாளையம் டிரக் டெர்மினல் சாலையில் ஹேப்பி ஸ்ட்ரீட்(Happy street) நிகழ்ச்சி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடத்த உத்தேசித்துள்ளது. இந்நிகழ்ச்சியில் உள்ளூர் வணிகங்கள் தங்கள் தயாரிப்புகள் மற்றும் சேவைகளை காட்சிப்படுத்த ஒரு அற்புதமான வாய்ப்பை உழவர்கரை நகராட்சி அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறது. ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறும் இந்த துடிப்பான மற்றும் பரபரப்பான நிகழ்வில் பங்கேற்க விரும்பும் ஆர்வமுள்ள விற்பனையாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

முறையாக விண்ணப்பிக்கும் தகுதி வாய்ந்த ஒவ்வொருவருக்கும் முறையே ஒரு விற்பனையகத்திற்கான இடம் (5 அடி அகலம் X 8 அடி நீளம்) ஒதுக்கீடு செய்து தரப்படும், தங்களது விற்பனையகத்தை (Stall) தாங்களே அவ்விடத்தில் நிறுவிக் கொள்ளலாம். இவ்விடத்தில் கீழ்க்கண்ட வியாபாரத்திற்கான இடம் ஒதுக்க உழவர்கரை நகராட்சி உத்தேசித்துள்ளது.

1. பழைய புத்தகங்கள் மற்றும் எழுதுபொருள் விற்பனைக் கூடம்,
2. விளையாட்டு உபகரணங்கள்,
3. குழந்தை பொம்மை பொருட்கள்,
4. ஆயத்த ஆடைகள்,
5. துணிக்கடைகள்,
6. அணிகலன்கள் விற்பனையகம்,
7. தோல் பொருட்கள் மற்றும் காலணிகள் விற்பனையகம்,
8. சிற்றுண்டி பொருட்கள் விற்பனையகம்,
9. குளிர்பான விற்பனையகம்,
10. வேளாண் மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள் விற்பனையகங்கள்,
11. மின் மற்றும் மின்னணு பொருட்கள் விற்பனை & பழுது நீக்கும் கூடங்கள்,
12. வீட்டு அலங்கார கடை,
13. சேவை மையங்கள்,
14. சிறப்பு கடைகள்,
15. விளம்பர கூடங்கள்.

ஒதுக்கீடு செய்த இடத்தில் ஞாயிற்றுக்கிழமை காலை 6:00 மணி முதல் இரவு 09:00 மணி வரை மட்டுமே விற்பனையகத்திற்கான இடத்தை உபயோகித்துக்கொள்ளலாம். கொடுக்கப்பட்ட நேரத்திற்குள் கூடத்தின் உரிமையாளர்கள் தங்களுக்கு கொடுக்கப்பட்ட இடத்தை காலி செய்து போக்குவரத்திற்கு இடையூறு இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். விண்ணப்பத்தை உழவர்கரை நகராட்சி தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் NULM Section (பழைய மேரி) அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். மேலும்: http://oulmun.in/whatsnew.php என்ற இணையப் பக்கத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
விண்ணப்பத்திற்கான கடைசி தேதி : 01-10-2024

ஆணையர்,
உழவர்கரை நகராட்சி,

மேலும் விவரங்களுக்கு – 9443076632 / 9600976363 / 9488447777 என்ற எண்ணை தொடர்பு கொள்ளவும்.

உழவர்கரை நகராட்சி
தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம்
புதுச்சேரி – 605010.

விண்ணப்பதாரரின் புகைப்படம்

உங்கள் சமீபத்திய பாஸ்போர்ட் அளவு வண்ண புகைப்படத்தை ஒட்டவும்

பெறுநர்,
ஆணையர்,
உழவர்கரை நகராட்சி,
தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம்,
புதுச்சேரி – 605010.

பொருள் : ஹேப்பி ஸ்ட்ரீட் பதிவு விண்ணப்ப படிவத்தை சமர்ப்பித்தல் :-

விண்ணப்பதாரரின் கையொப்பம்*

| | | | |
|---|---|---|---|
| விண்ணப்பதாரரின் பெயர்* | | | |
| தந்தை அல்லது கணவரின் பெயர்* | | அம்மாவின் பெயர்* | |
| பிறந்த தேதி* | பாலினம்* : | பெண் ஆண் மூன்றாம் பாலினம் | |
| தற்போதைய முகவரி* | மாநிலம் | அஞ்சல் குறியீடு | |
| நிரந்தர முகவரி* | மாநிலம் | அஞ்சல் குறியீடு | |
| ஆதார் எண் * | | | |
| PAN கார்டு எண் / ஓட்டுநர் உரிமம் எண் / | | | |
| வாக்காளர் அடையாள அட்டை * | | | |
| ரேஷன் கார்டு எண் | | | |

| | | |
|---|---|---|
| உபயோகிக்க தேவைப்படும் இடம் | (5 அடி அகலம் X 8 அடி நீளம்) | ஒரு மடங்கு<br>இரு மடங்கு<br>மூன்று மடங்கு<br>நான்கு மடங்கு/ வேற அளவு |

இந்த விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள அனைத்து விவரங்களும் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வரையில் உண்மையானவை என்று உறுதியளிக்கிறேன். விண்ணப்பப் படிவத்தில் உள்ள எந்த அறிக்கையும் சரிபார்ப்பில் தவறாகக் கண்டறியப்பட்டால், விண்ணப்பம் நிராகரிக்கப்படும் மற்றும் அத்தகைய தவறான தகவலின் அடிப்படையில் அனுமதி வழங்கப்பட்டால் தானாகவே ரத்து செய்யப்படும் என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

விண்ணப்பதாரரின் கையொப்பம்

**For Office Use Remarks**

**Office Seal** **Asst. Project Officer**